**தலைப்பு 276 – பதுளை மாவட்ட செயலகம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 276 - பதுளை மாவட்ட செயலகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுப் கொள்கைகளுக்குரிய தகவல் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களுக்குரிய பொழிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் பதுளை மாவட்ட செயலகத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 17 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 மே 16 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான புதுளை மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும்

பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

-

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் எனது கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப் பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டு பிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) பதுளை மாவட்ட செயலகத்தினால் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கும் வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

**ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

நிதிக்கூற்றுக்களில் உரிய ஆதனங்கள், பொறிகள் மற்றம் உபகரணங்கள. என்பவற்றை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 10 சொத்து விடயங்களுக்குரிய மீளாய்வாண்டின் ஆரம்ப மீதி 2022 ஆம் ஆண்டின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்ட இறுதி மீதியுடன் ஒப்பிடும் போது 98,064,262 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக்கொள்கிறேன். கடந்த ஆண்டில் பல சந்தர்ப்பங்களின் போது இம்முறைமை செயற் படாமல் இருந்ததால் மாதாந்தம் சமப்படுத்த முடியாமல் இருந்ததாக குறிப்பிடுகிறேன். | மீளாய்வாண்டின் ஆரம்ப மீதிகள் முன்னைய ஆண்டின் இறுதி மீதிகளுடன் இணங்க வேண்டும். |
| (ஆ) | ரூபா 2,637,248,204 ஆன நடைமுறை அல்லாத சொத்துக்கள் தொடர்பாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அதன் சரியான தன்மை உறுதிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். எதிர்காலத்தில் அதனை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிதி பிரமாணங்களின் பிரகாரம் வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | 2022 ஆம் ஆண்டின் போது செயற்படுத்தப்பட்டிருந்த கிராமங்களுடன் பிளிசந்திர நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் 04 பிரதேச செயலகங்களின் கீழ் ரூபா 24,244,453 செலவிட்டு நிர்மாணிக்கப் பட்டிருந்த 14 கட்டிடங்கள் மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் | ஏற்றுக்கொள்கிறேன். இந்த 14 கட்டிடங்கள் நிதி அல்லாத சொத்துக்களாக கணக்கீடு செய்வதற்கு பிரதேச செயலகங்களிற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகக் | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளவாறு நிதி அல்லாத சொத்துக்களாக நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிடுகின்றேன். | |
| (ஈ) | மீளாய்வாண்டில் ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவுப் பெறுமதி ரூபா 51,137,906 ஆக இருந்த போதும் மூலதனச் சொத்துக்கள் கையேற்றல் செலவின விடயத்தின் கீழ் செலவிடப்பட்ட செலவினம் ரூபா 83,497,029 ஆக இருந்ததால் ரூபா 32.359.123 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | SA 82 இல் சீராக்குமாறு அரச கணக்குகள் திணைக்களத்திடம் கோரியிருந்த போதும் சீராக்கப்படவில்லையென குறிப்பிடுகின்றேன். | வேறுபாடு இனங் காணப்பட்டு சரி செய்யப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

நிதி கூற்றுகளுக்குரிய செலவின முகாமைத்துவம் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செலவின நிதியளித்தலின் கீழ் பொழிப்பு படிவத்தின் நிகழ்ச்சிதிட்டம் 01 இன் உள்ளவரான செலவினம் 1,491,622,098 ஆக இருந்த போதும் ஒவ்வொரு நிகழ்ச்சிகளின் கீழ் செயற்திட்டத்தின் பிரகாரம் செலவின நிதியளித்தல் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உள்ளவாறான செலவினங்களின் மொத்தம் ரூபா 1,488,084,973 ஆக இருந்ததால் ரூபா 3,537,125 ஆன வேறுபாடு ஒன்று அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக்கொள்கிறேன் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள சமமான உருப் படிகள் ஒப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வெவ்வேறு செலவினை விடயங்களின் கீழ் கொடுப்பனவு செய்யும்போது கொடுப்பனவுகளின் சரியான தன்மை இலங்கை சனநாயக சோஷலிச நிதி பிரமாணத்தின் 137, 138 மற்றும் 200(4) இன் பிரகாரம் உறுதிப்படுத்தப்படாமல் கொடுப்பனவு செய்யப்பட்டதால் 12 பிரதேச செயலாளங்களினால் 75 சந்தர்ப்பங்களில் போது கூடுதலாக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 1,530,529 ஆன கொடுப்பனவுகள் உரிய பிரகாரம் செலவின விடயங்களுக்கு மிகை அறவீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் கணக்கு நடவடிக்கைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் போது சரியாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் உரிய செலவின விடயங்களின் கீழ் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகிறேன். | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் கொடுப்பனவுகளின் சரியானதன்மையை உறுதிப்படுத்திய பின்னர் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். |

**2.2 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள்**

நிதிக்கூற்றுக்களுக்கரிய பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளுக்குரியவை தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட பின்னிணைப்பு (iii) இன் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் எதுவும் இல்லை என்பதாகவும் பின்னர் தீர்வு செய்தமை தொடர்பாக தெரிவு பரிசோதனையின் போது 2024 ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் பதுளை மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகமொன்றனால் ரூபா 1,929,416 தொகை 2023 ஆம் ஆண்டிற்குரியதாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றேன். ஆண்டுக்குரிய அனைத்து பொறுப்புகளையும் இனங் காண்பதற்காக எதிர் காலத்தில் கணக்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தயவுடன் அறியத் தருகிறேன். | ஆண்டின் இறுதியில் உள்ள கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

**2.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதிஏற்பாட்டின் பயன்பாடு**

இது தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஊவா மாகாண காணி ஆணையாளரிடமிருந்து லுனுகல பிரதேச செயலகத்திற்கு 2022 திசெம்பர் 12 ஆம் திகதி நீர் பாதுகாப்பு ஒதுக்கிற்காக கிடைத்திருந்த ரூபா 200,000 ஆன யூனிசெப் நிதியுதவி கணக்காய்வு திகதியான 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் குறித்த செயற்பாடுகளுக்கு பயன்படுத்தாமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன். | கிடைத்துள்ள இது ஏற்பாட்டை செயற் திறனாக உரிய காலப்பகுதிக்குள் குறித்த செயற்பாடு களுக்காக பயன்படுத்துவதற்குத் திட்டமிடப்பட வேண்டும். |

**2.4 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் | இந்த அலுவலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டு | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய |

| | | |
|---|---|---|
| கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணப்பட்டு செல்லப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டியதுடன் இம் முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக பேணிச் செல்வதற்கு வேண்டிய மாற்றங்களை செய்ய வேண்டிய போதிலும் அம்மீளாய்வுகள் எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வெர்று மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | ஆக்கபூர்வமான முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்வதாக கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தியுள்ளதாக குறிப்பிடுகின்றேன். அது தொடர்பாக எழுத்துமூல மீளாய்வொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பேன். | கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மை**

தெரிவு கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளன.

| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் உடனான தொடர்பு** | **பெறுமதி ரூபா** | **இணக்கமின்மை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|---|
| (அ) | 2016 இன் 12 ஆம் இலக்க தகவலறியும் உரிமை தொடர்பான சட்டத்தின் 25 (1) மற்றும் 25 (5) (ஆ) பிரிவு | - | தகவலை அறிவதற்காக கோரலொன்று கிடைத்து 14 வேலை நாட்களுக்குள் அல்லது ஏதேனும் தாமதமானால் 25 (5) பிரிவின் பிரகாரம் 21 நாட்களுக்கு மேற்படாத காலப் பகுதியில் குறித்த வேண்டுகோளை பூர்த்தி செய்ய வேண்டிய போதிலும் 02 பிரதேச செயலகங்களுக்கு 2017 முதல் 2023 காலப் பகுதிக்காக கிடைத்திருந்த 15 தகவல் அறியும் விண்ணப்பங்கள் தொடர்பாக தகவல்கள் கோரல் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை | ஏற்றுக்கொள்கிறேன். இறுதியாக பதில் அனுப்புதல் தாமதமாக இடம்பெற்றுள்ளதாக தயவுடன் குறிப்பிடுகின்றேன். | தகவலறியும் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து தாமதம் இன்றி உரிய வேண்டுகோள் நிறைவேற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | | | |
| • XIX ஆம் அத்தியாயத்தின் 6.1 பிரிவு - | பொது சேவையில் உத்தியோகபூர்வ இல்லம் ஒன்றில் குடியிருப்பு காலம் ஆகக் கூடியது 05 வருடங்களாக இருக்க வேண்டிய போதிலும் லுனுகல பிரதேச செயலகத்திற்குரிய பழைய நீதிமன்ற கட்டிடம் உத்தியோக பூர்வ விடுதியாக 19 ஆண்டு காலமாக உத்தியோகத்தர் தொடர்ந்து அங்கு குடியிருந்தார், | பழைய நீதிமன்ற கட்டிடம் உத்தியோகபூர்வ விடுதியில் குடியிருக்கும் உத்தியோகத்தருக்கு 2023.09.30 இற்கு உத்தியோகபூர்வ இல்லத்தை கையளிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்குமாறு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | தாபன விதி கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும், |
| (இ) **பொது நிர்வாகச் சுற்றறிக்கை** | | | |
| பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு செயலாளரின் 14/2022 மற்றும் 2022 நவம்பர் 10 ஆம் திகதிய சுற்றறிக்கை மற்றும் HA/02/23 ஆம் இலக்க 2023 நவம்பர் 28 ஆம் திகதிய கடிதம் | ஒவ்வொரு பிரதேச செயலகத்தினாலும் லீவு தவிர ஏனைய செயற்பாடுகளுக்காக SYSCGAA அலுவலக முகாமைத்துவ முறைமையை பயன்படுத்த வேண்டிய போதிலும் 07 பிரதேச செயலங்களால் அம் முறைமை பயன்படுத்தப்படாமல் இருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக் கொள்கிறேன். SYSCGAA முகாமைத்துவ முறைமை முன்னோடித் திட்டங்களை சமர்ப்பிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட போதும் அதன் செயல்பாட்டில் காணப்படும் தவறு ஒன்றினால் பின்னர் செய்யப்பட்ட வேலைகள் படிவங்கள் மூலம் சமர்ப்பித்தல் இடம்பெறுவதாக குறிப்பிடுகின்றேன். | உரிய சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் மற்றும் கடிதங்களில் அறிவுறுத்தல் களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2023 ஆம் ஆண்டின் ஒன்றிணைந்த சேவைகள் உத்தியோகத்தர் களுக்கான வருடாந்த இடமாற்ற கொள்கையின் 2.2.2 மற்றும் 2.2.3 ஆம் பந்திகள் | ஒவ்வொரு சேவை நிலையத்திலும் 5 ஆண்டு களுக்கு மேற்பட்ட காலத்தை பூர்த்தி செய்திருந்த உத்தியோகத்தர்கள் இடம் மாற்றங்களுக்கு உரித்தாக்கப்பட வேண்டிய போதிலும் மாவட்ட செயலகத்தின் 10 உத்தியோகத்தர்கள் 06 ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகள் வரையாக ஒரே சேவை நிலையத்தில் சேவை புரிந்து வருகின்றனர். | ஏற்றுக்கொள்கிறேன். எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடுகின்றேன். | வருடாந்த இடமாற்ற கொள்கை குறிப்பிடப்பட்ட நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரிதிமாலியத்த பிரதேச செயலகப் பிரிவின் 42 கிராம சேவை பிரிவுகளில் 18 இல் சமுர்த்தி மேலதிக படிகள் (Top up) பெற்றுக் கொண்ட 6,504 நலனாலிகளில் 2,811 ஆன தெரிவுகளை அண்மித்து 2022 மே மாதத்திற்காக மேற் கொள்ளப்பட்ட கொடுப்பனவு தொடர்பான பரிசோதனையின் போது முதியோர் படிகள், சிறுநீரக படிகள் அல்லது வலது குறைந்தோர் படிகளின் கீழ் மேலதிக படிகளை பெற்றுக்கொள்கின்ற போதும் சமுர்த்தி உதவியின் கீழும் மேலதிக படிகள் கொடுப்பனவு செய்த காரணத்தால் இது இரண்டு முறை கணிப்பிற்குட்பட்ட 265 நலனாளிகளுக்கு மேலதிக படிகளாக ரூபா 736,500 தொகை கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | இத்தொகைக்குரிய தபால் அலுவலகத்தின் மூலம் வழங்கப்பட்ட காசுக் கட்டளைகள் அடிப்படையில் மிகை செய்யப்படும். | இருமுறை கணிப்பீடுகளைத் தவிர்ப்பதற்கு உரிய பிரிவுகளுக்கு இடையே முறையான கூட்டிணைப்புடன் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் மேலதிய கொடுப்பனவை அறவீடு செய்து அரச வருமானத்திற்கு செலவு வைத்தல் வேண்டும். |

## 2.7 வைப்பு மீதிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

## 2.8 மிகை அறவீடு செய்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2017 ஜூலை 29 ஆம் திகதி விபத்துக்குட்பட்ட ரித்திமாலியத்த பிரதேச செயலகத்திற்குரிய வாகனத்தை திருத்தம் செய்வதற்காக இலங்கை காப்பூறுதி கம்பெனியால் 2019 திசெம்பர் 20 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்த ரூபா 2,500,000 ஆன தொகை ஆண்டின் வருமானமாக இனங் காண்பதற்குப் பதிலாக பொது வைப்பு கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் காப்பறுதி மூலம் மீளளிக்கப்படாத ரூபா 3,849,333 ஆன நட்டத்தை பொறுப்பான தரப்பினரிடம் இருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | ரிதிமாலியத்த பிரதேச செயலகத்தின்ன் கெப் வண்டியை திருத்து வதற்காக இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்திற்கு வழங்கிய இழப்பீட்டுத் தொகை 2,470,000 ஆகும். இதன் திருத்த நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருவதால் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. | கெப் வண்டியை விரைவில் திருத்தம் செய்வதற்கும் காப்புறுதி மூலம் மீளளிக்கப்பட தொகையை பொறுப்பான தரப்பிடமிருந்து அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) காணி கையேற்கப்பட்ட நபர்களிடமிருந்து காணியை கையேற்கும் நடவடிக்கைகளை தீர்வு செய்து இழப்பீடு வழங்கல் இடம் பெறாமல் ரூபா 39,429,295 ஆன காணி கையேற்றல் இழப்பீட்டுத் தொகை 5 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலமாக பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | காணி கையேற்றும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாததால் அந்த இழப்பீட்டுத் தொகை பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது | காணியைக் கையேற்கும் நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அலுவலகத்தில் அனைத்து உத்தியோகபூர்வ கடமைகளுக்காக குலாம் வாகனத்தை பயன்படுத்தி அதற்காக எரிபொருள் கட்டளை மூலம் எரிபொருள் பெற்றுக் கொண்டிருக்கையில் 2022 பெப்ரவரி முதல் 2023 ஏப்ரல் வரையான காலப்பகுதியில் கந்தேகெட்டிய பிரதேச செயலகத்தில் சேவையில் ஈடுபட்டிருந்த இரண்டு பிரதேச செயலாளர்களினால் ரூபா 812,460 ஆன எரிபொருள் படிகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் நிதிப் பிரமாணம் 119 இன் பிரகாரம் கூடுதலாக செலுத்தப்பட்ட எரிபொருள் படிகளை 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கிறேன் முன்னாள் பிரதேச செயலாளர் பெற்றுக் கொண்டுள்ள ரூபா 69,135 ஆன எரிபொருள் படிகளை மீண்டும் திருப்பிச் செலுத்து வதற்காக இணக்கத்தை தெரிவித்துள்ளதுடன் அதனை அவருக்கு அலுவலகத்தில் இருந்து செலுத்த வேண்டிய நிலுவை தொகை கொடுப்பனவின் போது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிட விரும்புகிறேன். கந்தேகெட்டிய பிரதேச | முறையற்ற வகையில் மேலதிகமாக செலுத்திய எரிபொருள் படிகள் தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | செயலாளர் பெற்றுக்கொண்ட ரூபா 743,325 ஆன எரிபொருள் படிகளை அவர் உத்தியோகபூர்வ வாகனத்தை பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் அ.தற்காக வழங்கப்படும் எரிபொருள் படிகளில் இருந்து வழங்குவதற்கு இணக்கத்தை தெரிவித்துள்ள தாக தயவுடன் குறிப்பிடுகின்றேன். மேலே குறிப்பிட்ட நிதிப் பிரமாணம் 119(2)(ஆ) பிரிவின் பிரகாரம் 60 தவணைகளில் அறவிடுவது பொருத்தமானது என அங்கீகாரத்திற்காக பொது நிர்வாக உள்நாட்டு அலுவலக அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள தாக தயவுடன் குறிப்பிடுகிறேன். | |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 திட்டமிடல்**

2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தை தயாரிக்கும் போதும் செயற்படுத்தும் போதும் பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியதுடன் அதற்காக பயன்படுத்தப்பட வேண்டிய படிவங்கள் மற்றும் தரவுகள் உள்ளடக்கும் வழிகாட்டிகள் அரச நிதி திணைக்களத்தின் இணையதளத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் மாவட்ட செயலகத்தினால் மீளாய்வாண்டில் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கை திட்டத்தை பரீட்சிக்கும் போது மேற்படி வழிகாட்டலுக்கு இணங்காத வகையில் நடவடிக்கை எடுத்திருந்த 06 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | ஏற்றுக் கொள்கிறேன். மாவட்ட செயலகத்தின் தொலைநோக்கு செயற்பணி மற்றும் நோக்கங்கள் என்பவற்றை 2024 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன் | அரச நிதிச் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

## 3.2 எதிர்பார்த்த நலன்களை (Outcome) பெற்றுக்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பண்டாரவளை பிரதேச செயலகத்தினால் சௌபாக்கிய உற்பத்தி கிராம செயத்திட்டத்தின் கீழ் ரூபா 10,227,818 தொகை செலவு செய்து 02 கிராம சேவையாளர் பிரிவுகளை மேவுகை செய்யப்படும் வகையில் 183 நலனாலிகள் தெரிவு செய்யப்பட்டு பசுமை இல்லங்களில் பூக்கள் மற்றும் மரக்கறிகள் பயிரிடல், கோழி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு மற்றும் தேனீ வளர்ப்பு போன்ற செயற் திட்டங்களை செயற்படுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் மூலம் நலனாலிகளின் மாதாந்தம் சராசரி வருமானம் ரூபா 30,000 – 40,000 இடைப்பட்ட மட்டத்தில் மட்டத்துக்கு எடுத்துச் செல்லல் செயற்திட்டத்தின் பிரதான இலக்காக இருந்த போதும் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்திய பின் நலனாளி ஒருவரின் மாதாந்த சராசரி வருமானம் ரூபா 500 இற்கும் ரூபா 3,500 இடைப்பட்ட மட்டத்தில் காணப்பட்டமை காரணமாக செயற் திட்டத்தின் எதிர்பார்த்த இலக்கை அடைந்து கொள்ளவில்லை என அவதானிக்கப்பட்டது | ஏற்றுக்கொள்கிறேன். பொருளாதார வீழ்ச்சி மற்றும் கொவிட் தொற்று நிலைமை மற்றும் விவசாய உள்ளீடுகளின் விலை அதிகரித்தமை, உரப் பற்றாக்குறை, பயணத்தடை விதித்தமை போன்ற விடயங்கள் காரணமாக அறுவடை வீழ்ச்சி அடைந்து வருமான வழிகள் மூடப்பட்டதால் கிடைத்த வருமானம் வாழ்க்கை செலவினத்திற்கு பயன்படுத்திய காரணத்தினால் உற்பத்தி மற்றும் பயிர்ச் செய்கைக்காக ஈடுபடுத்துவதற்கு நிதி போதுமான அளவு இல்லாமை உற்பத்தி வருமானம் குறைவடைந்தமை, உற்பத்தி இயலளவு குறைவடந்தமை, தனி நபர் வருமானம் குறைவடைந்ததாகவும் குறிப்பிடுகின்றேன். | தொடர்ந்து பின் தொடர் நடவடிக்கைகள் எடுப்பதன் மூலம் செயற்திட்டத்தை செயற்படுத்தி எதிர் பார்க்கப்பட்ட இலக்குகளை நிறைவேற்று வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) ரித்திமாலியத்த பிரதேச செயலகத்தினால் சௌபாக்கிய உற்பத்தி கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 92 நலனாளிகளுக்கு ரூபா 4,048,000 தொகை செலவிட்டு 9,200 கோழிக் குஞ்சுகளும் ரூபா 5,391,472 தொகை செலவிட்டு உபகரணங்கள் உட்பட கூடுகளை அமைப்பதற்கு தேவையான பொருட்கள் வழங்கப் பட்டிருந்ததுடன் வழங்கப்பட்ட 9,200 கோழிக் குஞ்சுளில் கணக்காய்வு திகதியான 2023 திசெம்பர் 08 ஆம் திகதி வரை 7,371 அளவில் மரணித்திருந்தோ அல்லது விற்கப்பட்டிருந்தது. அந்த எண்ணிக்கை வழங்கப்பட்ட கோழிக் குஞ்சுகளின் எண்ணிக்கையில் 80 சதவீதமான அளவாக இருந்ததுடன் அதற்காக அரசினால் செலவிடப்பட்ட ரூபா 3,243,240 தொகையில் அதிக அளவிலான சதவீதம் ஒன்று | கொரோனா தொற்று பொருளாதார சிக்கல் காரணமாக நலனாளிகளுக்கு விலங்கு உணவுகளை பெற்றுக் கொள்வதற்கு சிரமமாக இருந்ததால் கருத்தில் கொள்ளக்கூடிய அளவு கோழிக் குஞ்சுகள் மரணித்துள்ளதை ஏற்றுக் கொள்வதாக ஏற்றுக் கொள்கிறேன். | தொடர்ந்து பின் தொடர் நடவடிக்கைகள் எடுப்பதன் மூலம் செயற்திட்டத்தை செயற்படுத்தி எதிர்பார்க்கப்பட்ட இலக்குகனை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | விளைவற்ற செலவினமாக மாறி இருந்தது. | | |
| (இ) | (i) | அல்ல பிரதேச செயலகத்தினால் சௌபாக்கிய உற்பத்தி கிராம நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 5,944,977 தொகை செலவிடப்பட்டு 2021 ஆம் ஆண்டின் போது செயற்படுத்தப்பட்ட பதிக் மற்றும் கைத்தறி புடவை உற்பத்தி மற்றும் அதனுடன் அண்மித்த ஆடை தயாரிக்கும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 02 ஆண்டு களுக்கும் மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் இதுவரை செயற்திட்டம் ஆரம்ப நிலைமையில் இருப்பது அவதானிக்கப்பட்டது. மேலும் செயற்திட்ட அறிக்கையின் பிரகாரம் சுற்றுலா பயணிகளை இலக்காகக் கொண்டு உற்பத்தியை உருவாக்குதல் ஏற்றுமதி சந்தையை அடிப்படையாக கொண்டு உற்பத்தியை ஏற்படுத்துதல் உட்பட ஏனைய நோக்கங்களை செயற்திறனாக நிறைவேற்றப் படாமல் இருந்ததுடன் அந்த நோக்கங்களை நிறைவேற்று வதற்கான செயற்பாடுகளுக்கான திட்டமும் 2023 ஆம் ஆண்டுக்காக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டம் தொடர்பான சிக்கல்களுக்காக ஆக்கபூர்வமான தீர்வு ஒன்றை வழங்குவதற்கு பிரதேச செயலகம் தவறியிருந்ததால் நலனாளிகள் செயற்திட்டத்திலிருந்து விலகும் ஆபத்தொன்று காணப்படுவதாக மேலும் அவதானிக்கப்பட்டது | உற்பத்தியாளர்களுக்கு தேவையான மூலப் பொருட்களை வழங்குவதற்கு சந்தை இனங்காணலின் கீழ் online சந்தைப்படுத்துவதற்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல் லக்சல நிறுவனத்திற்கு உற்பத்திகளை வழங்குவதற்கு கட்டளைகளைப் பெற்றுக் கொள்ளல், அல்ல பிரதேச செயலகத்தில் வாரச் சந்தையொன்றை நடத்துதல், நைட்டா நிறுவனத்துடன் இணைந்து பயிற்சி சந்தர்ப்பங்களை வழங்குதல் போன்ற செயற்பாடுகள் மூலமாக செயற்திட்டத்தை வெற்றிகரமாக்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தொடர் பின் தொடர் நடவடிக்கைகள் மூலம் செயற்திட்டத்தை வெற்றிகரமாக செயற்படுத்தி எதிர்பார்த்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| | (ii) | அல்ல பிரதேச செயலகத்தினால் சௌபாக்கிய உற்பத்தி கிராம நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பதிக் மற்றும் கைத்தறி புடவை உற்பத்தி மற்றும் அதனுடன் அண்மித்த ஆடை தயாரிக்கும் செயற்திட்டத்தை ஆகக்கபூர்வமாக திட்டமிட்டு செயற்படுத்தாமை காரணமாக ரூபா 1,283,024 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த புடவை பதனிடும் உபகரணங்களில் 35 உபகரணங்கள் கணக்காய்வு | ஏற்றுக்கொள்கிறேன் இது எதிர்காலத்தில் கிடைக்கும் நிதிஏற்பாட்டின் பிரகாரம் பல வர்ணங்களில் ரீ சேட் அச்சிடுவதற்காக தேவையான பயிற்சி நிகழ்ச்சிதிட்டங்களை நடத்தி நலனாளிகளை அறிவூட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது | |

| | | | |
|---|---|---|---|
| | திகதியான 2023 செப்தம்பர் 06 ஆம் திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்று மதுரகம கைத்தறி உற்பத்தி கட்டிடத்தில் வைக்கப்பட்டிருந்தன. | | |
| (ஈ) | பசறை மற்றும் லுனுகல பிரதேச செயலகங்களினால் முறையே ரூபா 7,139,063 மற்றும் ரூபா 7,255,335 தொகை செயற்திட்டத்தின் செலவிடப் பட்டு 2021 ஆம் ஆண்டின் போது செயல்படுத்தப்பட்டு இருந்த மடுகஸ்தலாவ மற்றும் கல்வெலகம கித்துள் கிராமத்தை உருவாக்கும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 02 ஆண்டுகளுக்கு காலம் முடிவடைந்திருந்த போதும் எதிர்பார்த்த நோக்கங்களை வெற்றிகரமாக அடைந்து கொள்ள முடியவில்லை. அதன் பிரகாரம் அரசினால் செலவிடப்பட்ட தொகைக்கு ஒப்பாக நலன்களைப் (outcome) பெற்றுக் கொள்வதற்கு தவறியிருந்ததாகவும் பாரம்பரிய கித்துள் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள 212 குடும்பங்களை தெரிவு செய்து உபகரணங்களை வழங்கு வதற்கும் பயிற்சி சந்தர்ப்பங்கள் சில வழங்கியமை தவிர வர்த்தக மட்டத்தில் செயற்திட்டத்தை செயல்படுத்தி நலனாளிகளின் வாழ்வாதார நிலையை மேம்படுத்துவதற்கும் தேசிய உற்பத்தியை அதிகரித்து தேசிய பொருளாதாரத்தை பலப்படுத்து வதற்காக பங்காளிப்பதற்கு செயற்திட்டம் தவறியிருந்ததாக அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக்கொள்கிறேன். கொவிட் காலப்பகுதியில் பிரிவில் நுழைவதற்கு முடியாதிருந்தது. செயற்திட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக மிகவும் பலமான செயற்பாடு ஒன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்தும் பொறுப்பினை பிரிவுக்கு இணைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு கையளிக்கப்பட்டது. அறுவடை செய்யக்கூடிய கித்துள் மரங்கள் அதிகளவில் காணப்பட்டாலும் ஒவ்வொரு மரத்திலிருந்தும் பெற்றுக் கொள்ளும் பாகின் அளவு வேறுபட்டது. காடுகளை அண்மித்த பிரதேசமாக இருப்பதால் சக்தி மூலமாக எரிவாயு நிராகரிக்கப்பட்டு விறகினை பயன்படுத்துவதற்கு நலனாலிகள் முன் வந்திருந்தனர். பாதுகாப்பாக கைத்தொழிலை நடத்திச் செல்வதற்காக மழை அங்கி, மழை உடை பாதுகாப்பு பட்டி வெற்று மேவுகை போன்றவை வழங்கப்பட்டுள்ளன. | எதிர்காலத்தில் செயற்திட்டத்தை வெற்றிகரமாக நடத்திச் செல்வதற்கும் எதிர்பார்த்த இலக்கை அடைவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 செயற்திட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிக மண் சரிவு ஆபத்துக்குட்பட்ட மூன்று பிரதேச செயலக பிரிவிற்குரிய 236 குடும்பங்களை மீள்குடியேற்றுவதற்காக 02 பிரதேச செயலகங்களுக்கு உரிய ரூபா 46,200,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 03 ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகள் வரை கடந்திருந்த போதும் இந்த ஆபத்துக்குட்பட்ட | ஹல்துமுள்ள பிரதேச செயலகத்திற்குரிய தோட்ட கம்பனி மூலம் உத்தேசிகப்பட்ட காணியை விடுவித்தலில் தாமதமாக இருந்ததால் மீள்குடியேற்றம் தாமதமாகின. அத்தாமதத்தை தோட்ட கம்பனி பொறுப்பேற்க வேண்டியதுடன் | மண்சரிவு ஆபத்திற்கு உட்பட்ட பிரதேசங்களின் மக்களை மீள் குடியேற்ற நடவடிக்கைகளை விரைவுபடுத்துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| குடும்பங்களுக்காக குடியிருப்பதற்காக சாதகமான நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் இருந்ததால் ஆபத்துக்கு உட்பட்ட குடும்பங்கள் உயிராபத்தை எதிர்கொண்டு முதலில் குடியிருந்த இடங்களில் இருப்பது அவதானிக்கப்பட்டது. | அதில் ஒட்டுமொத்த பொறுப்பையும் இந்த அலுவலகத்திற்கு பொறுப்பேற்க முடியாது. ஹப்புதளை பிரதேச செயலகத்திற்குரிய நலனாலிகளின் ஈடுபாடு, முயற்சி மற்றும் செயற்திறன் என்பவை இல்லாமையால் செயற்திட்டத்தை வெற்றிகரமாக்க முடியவில்லை. மேலும் இது தொடர்பாக அதிக அளவில் கவனம் செலுத்தி செயற்திட்ட நடவடிக்கைகளை விரைவில் பூர்த்தி செய்வதற்கு தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாக ஹாலிஎல பிரதேச செயலகத்தினால் மீள் குடியேற்ற நிகழ்ச்சிதிட்டத்தின் கீழ் உடகொஹொவில 100 ஏக்கர் என்ற இடத்தில் வீடமைப்பு செயற்திட்ட வேலைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் இவ்வாண்டு ஜூலை மாதம் 01 ஆம் திகதி வரையில் 37 குடும்பங்களை மீள் குடியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக குறிப்பிடுகின்றேன். | |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கந்தேகெட்டிய மற்றும் ஹல்துமுள்ள பிரதேச செயலகங்களினால் வெள்ளை மிளகு உற்பத்தி செயற திட்டத்திற்காக 2022 மே 20 மற்றும் 21 ஆம் திகதிகளில் தாபிக்கப்பட்ட ரூபா 4,555,000 ஆன மிளகு காய வைக்கும் இயந்திரங்கள் 2024 மார்ச் 31 ஆம் திகதி வரை குறை பயன்பாட்டில் காணப்பட்டன. | மிளகு அறுவடை குறைவடைந்தமையால் இயந்திரத்தை பயன்படுத்து வதற்கு எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் மிளகுகளை காய வைக்க முடியாமல் இருந்தது. ஏற்றுமதி விரிவாக்கல் 2024 ஆம் ஆண்டின் போது தயாரிக்கப்பட்ட மாற்று பயிர் காயவைக்கும் திட்டத்தின் பிரகாரம் செர்த்திட்ட முன்மொழிவு தயாரிக்கப்பட்டு அந்நடவடிக்கைகளை | அதிக அளவு பெறுமதியான இந்த இயந்திரங்களின் உச்ச இயலளவை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | பதுளை மாவட்டத்தில் 160 கிராம சக்தி மக்கள் சங்கங்களிடம் ரூபா 44,898,005 ஆன நிதி முறையாக செயற்திறனாக கிராமிய சமூகத்தின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக பயன்படுத்தாமல் விளைவற்ற வகையில் வங்கி கணக்குகளில் காணப்படுவது அவதானிக்கப்பட்டது. | செயலற்ற சங்கங்களிடம் உள்ள பணத்தை இயங்குகின்ற சங்கங்களுக்கு மாற்றுமாறு பிரதேச செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | கிராம சக்தி மக்கள் சங்கங்களுக்கு சொந்தமான நிதியத்தை சமூகத்தின் வாழ்க்கை நிலைமையை மேம்படுத்துவதற்காக செயற்திரனாக ஈடுபடுத்த வேண்டும் |

**3.5 நட்டங்களும் சேதங்களும்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வெளிமட பிரதேச செயலகத்திலிருந்து ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொண்டிருந்த ஒருவர் 2015 ஒக்தோபர் 31 ஆம் திகதி மரணமடைந்திருந்த போதும் ஓய்வூதிய தரவு முறைமை நாளது வரையாக்கப்படாதன் காரணமாக மரணித்ததன் பின்னரும் 2019 ஜூன் 30 ஆம் திகதி வரை மொத்தம் ரூபா 1,412,812 ஆன ஓய்வூதியம் அவரின் வங்கிக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்ததால் அவரின் வாரிசுகளால் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 650,434 தொகை 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் மீண்டும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கிறேன். வெளிமட பிரதேச செயலகத்தின் 21-1100013 ஆம் ஓய்வூதிய இலக்கத்தையுடைய மரணித்த ஓய்வூதியம் பெறுவோனின் வாரிசுகளால் பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 100,000 பணம் 0235338 மற்றும் 2024.01.29 ஆம் திகதிய பற்றுச்சீட்டின் மூலம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | ஓய்வூதிய தரவு முறைமை நாளது உரையாக்கப்பட்டு பேணுவதன் மூலம் கூடுதலான கொடுப்பனவுகளை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பண்டாரவல பிரதேச செயலகத்தினால் ஓய்வூதியம் பெறுவோருக்கு கூடுதலாக செலுத்தப்பட்ட ரூபா 386,075 ஆன ஓய்வூதிய கொடுப்பனவு தொடர்பாக பரிசோதனை சபை அறிக்கையின் பிரகாரம் வாரிசு களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய போதிலும் அப்பணத்தை கொடுப்பனவு செய்ய முடியாதென வாரிசுகளால் 2024 மார்ச் 05 ஆம் திகதி அறிவிக்கப்பட்டிருந்த | ஏற்றுக்கொள்கிறேன் குறித்த ஓய்வூதியம் பெறுவோருக்கு கூடுதலாக செலுத்தப்பட்ட ரூபா 386,075 ஆன தொகையை வாரிசு களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பண்டாரவல பிரதேச செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துக் கொள்கின்றேன் | ஓய்வூதிய தரவு முறைமையை நாளது வரையாக பேணுவதன் மூலம் கூடுதலான கொடுப்பனவுகளை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் கூடுதலான கொடுப்பனவுகளை அறவிடுதல் வேண்டும். - |

| | | | |
|---|---|---|---|
| | போதும் அது தொடர்பாக முறையான நடைமுறை ஒன்று 2024 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | | |
| (இ) | ஊவா பரணகம பிரதேச செயலகத்திற்குரிய கெப் வண்டி ஒன்று விபத்துக்கு உட்பட்டு 08 ஆண்டுகள் கடந்த பின்னர் அதற்குரிய நட்டங்கள் சேதங்கள் ரூபா 500,000 என 2019 மே 15 ஆம் திகதி மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் நி.பி. 104 (4) பரிசோதனை அறிக்கை பிரகாரம் விபத்திற்காக பொறுப்பு கூற வேண்டிய தரப்பினரிடமிருந்து அந்நட்டத்தை அறவிடுமாறு பரிந்துரைக்கப்பட்டிருந்த போதும் 2024 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்க வில்லை. 2021 திசெம்பர் 26 ஆம் திகதி இது தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனை கோரி இருந்தமை தவிர வேறு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நி.பி 104(4) இறுதி அறிக்கையின் பிரகாரம் 2022.06.23 ஆம் திகதி செயலாளர் உள்நாட்டு அலுவலக அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அந்த நட்டம் ரூபா 500,000 ஆகும். அதன் சாரதியிடமிருந்து நட்டத்தை அறவிடுவதற்கு சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | வாகன விபத்து தொடர்பாக நி.பி பரிசோதனை முறையாகவும் தாமதம் இன்றியும் நடத்தப்பட வேண்டியதுடன் இணங் காணப்பட்ட நட்டத்தை பொறுப்பான தரப்பினரிடம் இருந்து அறவிடுவதற்கு தாமதம் இன்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். - |

## 3.6 முகாமைத்துவ பலவீனங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய பாதீட்டு பணிப்பாளர் நாயகத்தின் 2004 ஒக்டோபர் 11 ஆம் திகதிய 118 ஆம் இலக்க பாதீட்டுச் சுற்றறிக்கையின் 3.2 ஆம் பந்தியின் பிரகாரம், மாகாண சபைகளுக்கு உத்தியோகத்தர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றால் அம்மாகாண சபையிடமிருந்து குறித்த கடன் தொகையை ஒரே தடவையில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அவ்வாறு அறுவிட முடியாதாயின் அதனை மாதாந்தமோ தவணையாகவோ அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் பதுளை மாவட்ட செயலகத்திலும் பிரதேச செயலகங்களிலும் சேவை புரிந்து மாகாண சபை நிறுவனங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்த 08 | குறித்த பட்டியலில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ சேவை உதவியாளரின் கடன் மீதி தவணை அடிப்படையில் அறவிடப்படுவதுடன், தற்போது அவரிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 203,800 ஆகும். ஏனைய உத்தியோகத்தரிடம் இருந்து கடன் மீதிகளை தீர்க்குமாறு ஊவா மாகாண சபைக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் இதுவரை தீர்வு செய்யப்பட்டு இருக்கவில்லை. | குறித்த பாதீட்டுச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 882,843 ஆன கடன் மீதி 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. அக்கடன் மீதிகளில் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் 03 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 223,327 ஆன கடன் மீது ஒன்றும் 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 297,532 ஆன கடன் மீதி ஒன்றும் அடங்கியிருந்தது.. | | |
| (ஆ) | 08 பிரதேச செயலாளங்களினால் ஆரம்ப சம்பளம், வாழ்க்கை செலவினப் படி மற்றும் பணிக்கொடை கூடுதலாகக் கொடுப்பனவு செய்த காரணத்தினால் 64 ஓய்வூதியம் பெறுவோருக்கு ரூபா 16,597,873 மேலதிகமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன், 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் அதில் மீள அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 9,081,544 ஆக இருந்தது. மேலும், ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தின் 3/2022 ஆம் இலக்க 2022 ஜுன் 10 ஆம் திகதிய ஓய்வூதியச் சுற்றறிக்கையின் 07 ஆம் பிரிவின் பிரகாரம், ஓய்வூதியத்தை கூடுதலாகக் கொடுப்பனவு செய்தமை தொடர்பாகத் தேவையான சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்குப் பிரதேச செயலாளர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், அதற்காக அரசின் நிதிப்பிரமாண இலக்கம் 101 தொடக்கம் 113 வரையான ஏற்பாடுகள் மற்றும் தாபன விதிக்கோவையின் 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளையும் பிரதேச செயலாளர்கள் பின்பற்ற வேண்டும் எனக் குறிப்பிடப்பட்ட போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ஏற்றுக் கொள்கின்றேன். இதன் மூலம் குறிப்பிடப்பட்டிருந்த ஓய்வூதியம் பொறுவோருக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்த தொகையை மீள அறிவிடுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. | கூடுதலாக ஓய்வூதியம் கொடுப்பனவு செய்தது தொடர்பாக உரிய ஓய்வூதியச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையில் 02 (i) ஆம் பந்தி மற்றும் 2023 மே 12 ஆம் திகதிய 2/2021(viii) ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் | ஏற்றுக் கொள்கின்றேன். இது தொடர்பாக கீழே குறிப்பிடப்பட்ட நடைமுறைகளை எடுத்ததாக குறிப்பிடுகின்றேன். | உரிய பொது நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அனைத்து அரச உத்தியோகத்தர் களின் வருகை மற்றும் வெளியேறல் கைவிரல் அடையாளம் இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் 06 பிரதேச செயலகங்களின் 17 பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்ட செயலாளரின் 4 பதவிநிலை உத்தியோகத்தர்களால் பொதுமக்கள் தினத்தில் மாத்திரம் கைவிரல் அடையாள இயந்திரத்தின் மூலம் வருகை மற்றும் வெளியேறல் என்பவற்றை உறுதிப்படுத்துவதும் அலுவலகத்தில் தரித்திருக்கும் ஏனைய நாட்களில் கைவிரல் அடையாள இயந்திரத்தின் மூலம் வருகை மற்றும் வெளியேறல் உறுதிப்படுத்தப்படாமை தெரிவு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது. மேலும் தெரிவு பரிசோதனையின் பிரகாரம் 02 பிரதேச செயலகங்களின் 7 உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்ட செயலகத்தின் இரண்டு உத்தியோகத்தர்கள் அவ்வாறு 118 வருகை மற்றும் வெளியேறல் என்பவற்றை உறுதிப்படுத்தாமல் அரசின் விடுமுறை தினங்களில் கடமைக்கு அறிக்கையிட்டதாக குறிப்பிட்டு அதற்காக விடுமுறை தின படிகளாக ரூபா 504,030 தொகை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | • எதிர்காலத்தில் வருகை மற்றும் வெளியேறல் கைவிரல் அடையாளம் இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டுமென குறித்த உத்தியோகத்தர்களை அறிவூட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடுகின்றேன்.<br>• உத்தியோகத்தர்கள் விடுமுறை தினப் படிகளுக்கு உறுதிச்சீட்டுக்களை சமர்ப்பிக்கும் போது கைவிரலடையாள இயந்திரத்தின் நாளாந்த குறிப்புக்கள் சரியாக பரீட்சிக்கப்பட்டு ‘‘வருகை மற்றும் வெளியேறல் சரியானதென’’ முத்திரையிடுதல் கட்டயமாகும் என குறித்த லீவு எழுதுனருக்கு ஆலோசனை வழங்கியுள்ளேன். | |
| (ஈ) | அரசின் காணிகளில் உரித்தினைப் பாதுகாப்பதற்காக அத்துமீறிய பிடிப்பு நடவடிக்கைகளை தவிர்க்கும் பொருட்டு அனைத்து கிராம சேவையாளர்களால் தமது பிரிவில் காணப்படும் அத்துமீறிய பிடித்தல்கள் தொடர்பாக ஆ.ஏ.ஆ 60 படிவத்தின் மூலம் ஒவ்வொரு இரண்டு வாரத்திற்கு ஒரு தடவையும் பிரதேச செயலாளருக்கு அறிவிக்கப்பட வேண்டிய போதிலும் மகியங்கனை பிரதேச செயலகத்தின் 20 கிராம சேவை உத்தியோகத்தர்களால் இரண்டு வார அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கிறேன் மகியங்கன பிரதேச செயலகப் பிரிவில் இரண்டு வார அறிக்கைகளை வழங்காத கிராம சேவையாளர்கள் தொடர்பாக அவர்களிடம் இருந்து விடுவிப்பிற்கு காரணங்கள் கோரி முறையான நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடுகின்றேன் | முறைப்படி இரண்டு வார அறிக்கைகளை சமர்ப்பித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 2006 ஆம் ஆண்டிலிருந்து 2023 ஆம் ஆண்டு வரை காலப்பகுதியில் 07 பிரதேச செயலங்களினால் மாவட்ட நில அளவையாளர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட 1147 அளவீட்டு கோரல்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன் அளவீட்டுக் கட்டளைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக நில அளவையாளர் அலுவலகத்திற்கு நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ள தாக அறிய தருகின்றேன். | அளவீட்டு கட்டளைகளை விரைவில் நிறைவேற்றிக் கொள்வதற்காக தேவையான பின் தொடர் நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | மீகஹகியுல மற்றும் பதுளை பிரதேச செயலகங்களின் கீழ் அத்துமீறிய கையேற்றல்கள் தொடர்பாக உரித்தை மீறப் பெற்றுக் கொள்வதற்காக கிடைத்திருந்த 21 வெளியேற்றும் கட்டளைகள் கிடைத்து 9 மாதங்களில் இருந்து 5 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் அக்கட்டளைகளை செயல்படுத்தாமை காரணமாக அரசின் ஆவணங்களை முறையற்ற பயன்பாட்டுக்கு உட்படுத்துவதற்கு இடம் அளிக்கப்பட்டுள்ளமை தெரிவு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக் கொள்கிறேன். பதுளை பிரதேச செயலகத்தில் அத்துமீறிய கையேற்றங்கள் தொடர்பாக ஆட்கள் பணத்தைச் செலுத்த முன் வராவிடின் உரித்தை மீளப் பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக குறிப்பிடுகின்றேன். | உரிய முறையில் நிதி ஏற்பாடுகளை மேற்கொண்டு வெளியேற்றும் கட்டளையை செயல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ') | பதுளை மாவட்டத்தின் 15 பிரதேச செயலகங்களுக்கு உரிய 47 சமூர்த்தி வங்கிகளினால் 2,636 நலனாளிகளுக்கு வழங்கப்பட்ட கடன் தொகையில் ரூபா 194,512,752 ஆன நட்ட கடன் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் அறவிடப்பட்டிருக்க வில்லை. | நிலுவைத் தொகை அறவிடப்பட்டு வருகின்றது. | குறித்த கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நிலுவைத் தொகை அறுவிடப்பட வேண்டும். |

## 4. நல்லாளுகை

### 4.1 பொதுமக்கள் சேவைளை நிறைவேற்றுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதி காலாண்டில் 10 பிரதேச செயலகங்களுக்குக் கிடைத்த 155 மரங்களை வெட்டும் அனுமதி பத்திரங்களை பதிவு செய்யும் விண்ணப்பங்கள் 1 மாதம் முதல் 22 மாதங்களுக்கு இடைப்பட்ட காலதாமதத்தின் பின், பதிவு செய்யப்பட்டு வழங்கப் பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக்கொள்கிறேன். மரங்களை வெட்டி வீழ்த்துவதற்கான விண்ணப்பங்கள் அலுவலகத்திற்கு கிடைத்த பின்னர், காணியின் உரித்தை தீர்வு செய்தல், உரிமையாளரின் விருப்பத்தை உறுதிப்படுத்துதல் மரம் வெட்டும் செயற்பாட்டை | பொது மக்களுக்காக வினைத்திறனான மற்றும் விரைவான சேவை ஒனறை வழங்குவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதன் பிரகாரம், பொது மக்களுக்காக செயற்றிறனான மற்றும் விரைவான சேவை ஒன்றை வழங்கும் தேவைப்பாடு பிரஜைகள் சாசனத்தில் உறுதிப்படுத்தப்பட்டு இருந்த போதும் அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்காமல் இருந்தமை அவதானிக்கப்பட்டது. | உறுதிப்படுத்துதல், ஏனைய நிறுவனங்களிடம் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளல் போன்ற செயற்பாடுகள் முறையே மேற்கொள்ளப்படுவதால் சட்டவிரோத மரம் வெட்டுதலை தவிர்க்கும் நடவடிக்கைகள் காரணமாக இத்தாமதம் ஏற்பட்டுள்ளது. | |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதி காலாண்டில் 12 பிரதேச செயலகங்களுக்குரிய தனி நபர் வியாபாரப் பெயர் பதிவு செய்வதற்காகக் கிடைத்த 73 விண்ணப்பங்கள் 1 மாதத்திற்கும் 11 மாதங்களுக்கும் இடைப்பட்டிருந்த கால தாமதத்தின் பின்னர் பதிவு செய்யப்பட்டு வழங்கப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக்கொள்கிறேன். வியாபாரத்தை ஆரம்பிக்காமை, விண்ணப்பங்களில் குறைபாடுகள் காணப்பட்டமை, உத்தியோகத்தர்களின் வேலைப்பழு, பதவிநிலை உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை போன்ற சிக்கல்கள் காரணமாக பதிவு சான்றிதழை வழங்குதல் தாமதமாகியதாகவும் எதிர்காலத்தில் காலதாமதம் இன்றி தனி நபர் வியாபார பெயர்களை பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகக் குறிப்பிடுகின்றேன். | பொது மக்களுக்காக வினைத்திறனான மற்றும் விரைவான சேவை ஒன்றை வழங்குவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2020 செப்டம்பர் 15 ஆம் திகதிய PC/GPA/Circular/29/2020 ஆம் இலக்க ஜனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் அனைத்து அரசு நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் பொதுமக்கள் தினமான திங்கள் திங்கள் கிழமையில் தமது அலுவலகத்தில் தரித்திருக்க வேண்டிய போதிலும் அத்தியாவசிய நடவடிக்கைகள் தவிர அத்தினத்தில் விடுமுறைகளை பெற்றுக் கொள்ளுதல் மற்றும் அலுவலர் வெளி கடமைகளில் ஈடுபடுவதை தவிர்க்க வேண்டிய போதிலும் 14 பிரதேச செயலகங்களின் பதவி நிலை உத்தியோகத்தர்கள் மற்றும் பதவி நிலை உத்தியோகத்தர் அல்லாத கருத்தில் கொள்ளக்கூடிய தரப்பினர் திங்கட்கிழமைகளில் அலுவலகத்தில் சேவைக்கு அறிக்கையிட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கிறேன் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச செயலகங்களின் பிரதேச செயலாளர்ளுக்கு இது தொடர்பாக அறிவுறுத்தப் பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் அத்தியவசிய நடவடிக்கை தவிர திங்கட்கிழமைகளில் விடுமுறை வழங்கப்படமாட்டாது எனவும் விடுமுறைகளை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் தயவுடன் அறியத் தருகிறேன். | குறித்த சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் பொதுமக்கள் தினத்தில் பொது மக்கள் தேவைகளை நிறைவேற்றுவதற்கு தடை இல்லாத வகையில் உத்தியோகத்தர்கள் அலுவலகத்தில் தரித்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |